Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 29, 2021

திங்கட்கிழமை நவம்பர் 29, 2021 | ஒளி: 07 கதிர்: 165 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

ஊடகவியலாளர் மீது தாக்குதல்:

# இராணுவத்தினர் மூவர் கைது



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளரும் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இராணுவ வீரர்கள் மூவர், முல்லைத்தீவு பொலிஸாரால், நேற்று (28) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## குமிழைக் கண்டு அலறிய சிறுமி

பிரியங்கர ஜயசிங்ஹ



எட்டுவயதான சிறுமியின் சமயோசித்தால் ஏற்படவிருந்த காஸ் சிலிண்டர் வெடிப்பு, தவிர்க்கப்பட்ட சம்பவமொன்று புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. புத்தளம், தலுவ நிர்மல்புர பிரதேசத்தில் வசிக்கும் அமாயா என்ற சிறுமியின் சமயோசிதத்தால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கோதுமை மாவின் விலை அதிகரிப்பால்

## கொத்து, பாண், சிற்றுண்டி விலை உயர்வு

பாண், கொத்து ரொட்டி, சிற்றுண்டிகளின் (ஷோர்ட் ஈட்ஸ்) விலைகளையும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

நேற்று (28) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில், பாணின் விலை அதிகரிக்கப்பட உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதுடன், கொத்து ரொட்டி மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளை இன்று (29) முதல் அதிகரிக்க




தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

தடை செய்யப்பட்ட நாடுகளில் இருந்து

## இரு வாரங்களாக எவரும் வரவில்லை

புதிதாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் கொரோனா மாறுபாட்டின் அச்சுறுத்தல் காரணமாக, நாட்டுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்ட ஆறு தென்னாபிரிக்க நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## கழிவு நீருக்குள் பறந்த சின்னச் சிலிண்டர்

ஜூட் சமந்த

ஆராச்சி கட்டுவ வைரன்கட்டுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த சிறிய சிலிண்டரில் கசிவு ஏற்பட்டதை அடுத்து, அந்த சிலிண்டரை தூக்கி, கழிவு நீர் தேங்கியிருந்த பகுதியில் வீசியெறிந்துள்ளனர்.



தொடர்ச்சி P2

எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிக்க

## ஏழு மாவட்டங்களில் இருந்து மாதிரிகள்

சந்தையில் கிடைக்கும் எரிவாயுக்களின் தரத்தை பரிசோதிப்பதற்காக ஏழு மாவட்டங்களில் இருந்து மாதிரிகள் எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

உள்வீட்டு மோதல் வலுக்கிறது

## தாமரை மொட்டை கைவிடுகிறது 'கை'

அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் முறுகல் நிலை, தற்போது பகிரங்கமாகவே இடம்பெறத் தொடங்கியுள்ளது. இந்நிலையில், எப்போது வேண்டுமானாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பகிரங்கமான அறிவிப்பொன்றை விடுக்குமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




## மகாவலி கங்கைக்குள் பாய்ந்த கார்

### ஒருவர் பலி; இருவர் தப்பினர்

கண்டி- குருதெனிய பிரதான வீதியால், நேற்று முன்தினம் இரவு (27 ) பயணித்துக் கொண்டிருந்த காரொன்று, 11 மணியளவில், இலுக்மோதர பகுதியிலுள்ள மகாவலி கங்கைக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைப் பட்டியலில் இருந்து

## புலிகளை நீக்குமாறு கோரிய மனு நிராகரிப்பு

ஐரோப்பாவின் சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலிலிருந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக, சர்வதேச



ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்:

## வடக்கு, கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்

### இராணுவத்தினர் மூவர் கைது

வா.கிருஸ்ணா, விஜயரத்தினம் சரவணன்

முல்லைதீவு, திருகோணமலை பகுதிகளில், இராணுவத்தினராலும் குண்டர்களாலும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று (28) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

விமான நிலையத்தின்

## கொரோனா பொறிமுறை தொடர்பில் அதிருப்தி

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்படும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை அடையாளம் காணும் பொறிமுறைமை தொடர்பில் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, இவ்விடயம்



தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

குறிஞ்சாக்கேணி விபத்து

## மற்றுமொரு சிறுமி மரணம்

எப்.முபாரக், ஹஸ்பர் ஏ ஹலீம், தீஷான் அஹமட்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பகுதியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற படகுப் பாதை விபத்தில் பாதிக்கப்பட்டு, திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி ஒருவர், நேற்று (28) உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். கிண்ணியா அல் அஷ்கர் வித்தியாலயத்தில் தரம் 1இல் கல்வி பயிலும் குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த ரபீஸ் பாத்திமா நிபா என்ற 6 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



தொடர்ச்சி P2

ஒமிக்ரோன் அச்சத்தால்

## எல்லைகளை மூடிய முதல் நாடு

ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இத்தாலி, இஸ்ரேல் ஆகிய நாடுகளில், நேற்று முன்தினம் (27) ஒமிக்ரோன் மாறுபாடு அடையாளம் காணப்பட்டதாகவும் அதனையடுத்து இஸ்ரேல் தனது நாட்டு எல்லைகளை மூடியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2



## பூஸ்டர் பெறுவது மிகவும் முக்கியம்

### நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது

புதிதாக கண்டறியப்பட்ட கொரோனா மாறுபாடான 'ஒமிக்ரோன்' வைரஸைத் தடுப்பதற்கான வழிகளைத் தெளிவுபடுத்தும் அதேவேளை, பூஸ்டர் டோஸைப் பெறுவது இந்த நேரத்தில் மிகவும் முக்கியமானது என்றும் அடிப்படை சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க மக்களைக் கோருவதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு, மூலக்கூறு மற்றும் செல் உயிரியல் மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திமா ஜீவந்தர தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இராணுவத்தினர் மூவர் கைது

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, நேற்று, முல்லைத்தீவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் மட்டுமன்றி, வடக்கிலும் கிழக்கிலும் ஊடக அமைப்புகளால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# கொத்து, பாண், சிற்றுண்டி விலை உயர்வு

அதன்படி, கொத்துரொட்டியின் விலையை 10 ரூபாயாலும், ரோல்ஸ், மரக்கறி ரொட்டி, முட்டை ரொட்டி, பராட்டா உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலையை 5 ரூபாயாலும் அதிகரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 17 ரூபாயால் அதிகரிக்கப்படுவதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் (27) அறிவித்திருந்தனர்.

இதனையடுத்தே கோதுமை மா உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க, தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இரு வாரங்களாக...

தென்னாபிரிக்கா, நமீபியா, போட்ஸ்வானா, சிம்பாப்வே, லெசோதோ மற்றும் சுவாசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என்றும், ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக, நேற்று (28) நள்ளிரவு முதல் நாட்டுக்குள் நுழைய அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 14 நாள்களில் இந்த நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் தவிர வேறு எவரும் நாட்டுக்கு வந்துள்ளார்களா என்பது குறித்து உரிய திணைக்களங்கள் ஆராயும் எனவும் அதற்கேற்ப சுகாதாரத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

தடை செய்யப்பட்ட 6 நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்த தடையும் இல்லை என்றும் விசா வழங்கும்போது மேற்குறிப்பிட்ட பயணிகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்களா என்பதை அதிகாரிகள் பரிசோதிப்பார்கள் என்றார்.

நாட்டின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 90% பேர் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்த அவர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கு இணங்க புதிய வழமை மயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் மக்களைப் பாதுகாப்பதற்கும் நாட்டைப் பேணுவதற்கும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

# குமிழைக் கண்டு அலறிய சிறுமி

வீட்டின் மற்றுமோர் அறையில் வைக்கப்பட்டிருந்த மேலதிக காஸ் சிலிண்டரில் இருந்து குமிழ் வருவதை அவதானித்த, எட்டுவயதான சிறுமி அலறியடித்துக்கொண்டு, பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

விரைந்து செயற்பட்ட பெற்றோர், காஸ் சிலிண்டரை வீட்டுக்குள்ளிருந்து வெளியே உடனடியாக அப்புற ப்படுத்தியுள்ளனர்.

# ஏழு மாவட்டங்களில் இருந்து மாதிரிகள்

எரிவாயு தொடர்பில் அண்மைக்காலமாக நாட்டில் வழமைக்கு அப்பாற்பட்ட விடயம் இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர், எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பது இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பொறுப்பாகும் எனவும், அது தரத்தை பரிசோதிக்க ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக, இலங்கையில் விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களில் கசிவு மற்றும் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றமை மக்கள் மத்தியில் கடும் பீதியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமையல் எரிவாயு விற்பனை நிலையமொன்றில் வீட்டுப் பாவனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்ட சம்பவம் நேற்றையதினம் (28) பதிவாகியுள்ளது.

அதனையடுத்து, விடயம் தொடர்பில், எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையத்தைத் தொடர்பு கொண்டமைக்கு அமைய புதிய எரிவாயு சிலிண்டரை எரிவாயு விற்பனை நிலையம் விநியோகித்ததாக அறியமுடிகிறது.

இதேபோல், வீடுகளில் எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்படுவதை அவதானித்தால் அல்லது உணர்ந்தால் உடனே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட விற்பனை நிலையங்கள் அல்லது சமையல் எரிவாயு நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை பிரிவைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு துறைசார் அதிகாரிகள் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

# கசிவு நீருக்குள்...

கசிவு ஏற்பட்டதன் பின்னர், தீப்பிடித்துக் கொண்டிருந்த நிலையிலேயே அச்சிலிண்டரை தூக்கியெறிந்துள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று (28) கொள்வனவு செய்து வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த ஐந்துகிலோ கிராம் நிறையைக் கொண்ட காஸ் சிலிண்டரை, இணைக்கும் போதே கசிவு ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து தீ பற்றியுள்ளது. உடனடியாக செயற்பட்டமையால், உயிர்ச் சேதங்களோ, சொத்துச் சேதங்களோ ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# புலிகளை நீக்குமாறு...

ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்தில் சர்வதேச பயங்கரவாத அமைப்பு என்று, விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரியே இந்த மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

டென்மார்க்கை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல் தரப்பினர் இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்ததாக அறிய முடிகிறது.

குறித்த மேன்முறையீட்டு மனுவை நிராகரித்த நீதிமன்றம், சட்ட செலவுகளைச் செலுத்துமாறு பணித்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் முதன் முதலாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த 2006 ஆம் ஆண்டில் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்னர், விடுதலைப் புலிகளின் ஆயுத போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அந்த அமைப்புக்கு நிதி சேகரிப்பு மற்றும் மீள் உருவாக்கத் திறன் இன்னும் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 2019 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தது.

# கொரோனா பொறிமுறை...

புதிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் மாறுபாடு தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய கொரோனா அடையாள நடைமுறை, சுகாதார அமைச்சின் பொறுப்பற்ற ஊழியர்களைக் கொண்டுள்ளது என்பதை அவர் வலியுறுத்தினார்.

சுங்க மற்றும் குடிவரவு அதிகாரிகள் மூலம் சுகாதார அமைச்சின் பிரதிநிதிகளை வெளிநாட்டவர்கள் சந்தித்ததாகத் தெரிவித்த அவர், இதனால், சுகாதார அதிகாரிகளைத் தவிர்க்க வெளிநாட்டவர்களுக்கு சுதந்திரம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஒமிக்ரோன் மாறுபாடானது எந்த நேரத்திலும் நாட்டுக்குள் நுழையலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

# தாமரை மொட்டை கைவிடுகிறது 'கை'

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படும் நோக்கில் காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் பாராளுமன்றம் மற்றும் பொது இடங்களில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர். பதிலுக்கு சுதந்திரக் கட்சியும் பதிலடி கொடுத்துவருகின்றது.

இந்நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்பிலான தங்களுடைய நிலைப்பாட்டை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பகிரங்கமாகவே அறிவித்து வருகின்றது.

### அமைச்சர் ரோஹித் அபேகுணவர்தன

எம்முடன் இணைந்திருக்காவிட்டால் கதவு மூலையில் தான் நின்றிருக்க வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திர நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அரசியல் செய்யும் போது வாலை வளைக்கும் முறை எமக்குத் தெரியும். பலனைப் பெறும் நேரம் எமக்குத் தெரியும் என்றார்.

### இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க

அரசாங்கம் எடுத்த தீர்மானம் ஒன்றை, விவசாயத்துறை அமைச்சரை மாத்திரம் அடிப்படையாக வைத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றச்சாட்டை முன்வைப்பது தவறானது. இத்தீர்மானம் அமைச்சரவையில் எடுத்த தீர்மானம். அமைச்சரவைக்குள் இணக்கத்தை தெரிவித்து விட்டு, வெளியே சென்று மற்றொரு கருத்தை கூறுவது தவறு.

அரசாங்கத்துக்குள் இருக்கும் போது, சிறந்த முறையில் இருப்பதற்கான தர்மம் ஒன்று உள்ளது. ஓரிருவர் அவ்வாறு இருக்க முடியாவிட்டால், தயவு செய்து வெளியே சென்று எதிர்க்கட்சியில் அமருங்கள் என்றார்.

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இணைந்துள்ளமையால் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஆனால், எம்முடன் 150 க்கும் அதிகமான உறுப்பினர்கள் இணைந்த பின்னரே அவர்கள் இணைந்தனர். இந்த நேரத்தில் கட்சி ரீதியில் காற்று அடித்துக்கொள்ளாமல், பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இணைந்து செயற்படுவது சிறந்தது எனக் கூறியுள்ளார்.

### இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த

இந்த அரசாங்கத்தை உருவாக்க அவர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள் தான். ஆனால், அவர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்பதற்காக சிலருக்கு அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்வதற்கு தேவை இருந்தால், அந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, எமது குழு தயாராகவே உள்ளது. கட்சிக்குள் பேச வேண்டிய விடயங்களை கட்சிக்குள்ளேயே பேசி முடித்து விட வேண்டும். ஆனால், சிலருக்கு எந்த இடத்தில் எவ்வாறு கதைப்பது என்ற புரிதல் இல்லாமல் உள்ளது என்று தெரிவித்தார்.

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

சகல கூட்டணி கட்சிகளுடனும் இணைந்து 11 வருடங்கள் கடமையாற்றியுள்ளேன். எனவே, அதனை அனைவரும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். இன்று மக்கள் வாழ்வதற்கான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சினைகளை முன்வைத்து, அதற்கான தீர்வினை வழங்க வேண்டும். ஆனால், இவர்கள் அதனை பின்புறமாக மறைத்துவிட்டு, தமது தேவைகளுக்காக குரல் கொடுக்கின்றனர்.இது தொடர்பில் மக்கள் தீர்மானிப்பர் என்றார்.

### இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா

இது மக்கள் வழங்கிய அதிகாரம். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு வேறாக வாக்களிக்கவில்லையே. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கே வாக்களித்தனர். எனவே இந்தப் பகுதி எனது, அந்த பகுதி அவரது எனப் பிரித்து வேறாக்குவது சிறந்த விடயமல்ல. யாராவது இந்த அரசாங்கத்துடன் இருக்கக் கூடாது. இருப்பது தவறு என நினைப்பார்களாயின் அவர்களை வலுக்கட்டாயமாக வைத்துக்கொள்ளமாட்டோம் என்றார்.

இதேவேளை, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இப்போதே தயாராகி வருவதாக, அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்காணல்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஏற்கெனவே ஆரம்பித்துள்ளதுடன், கடந்த வாரம் முழுவதும் கட்சியின் தலைமையகத்தில் நேர்காணல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தமது கட்சியைப் புறக்கணிப்பதாக அக்கட்சியில் உள்ள பலர் நீண்டகாலமாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக, உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில், தங்களுக்கு விருப்பமான தீர்மானத்தை எடுக்குமாறு, கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர அண்மையில் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தார்.

இதேவேளை, கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை இலக்கு வைத்து, அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சேறு பூசும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பொதுஜன பெரமுனவின் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும் இடையில் அண்மையில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலானது, இரு கட்சிகளுக்கும் இடையிலான அரசியல் முரண்பாட்டின் உச்சக்கட்டமே என, அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பூஸ்டர் பெறுவது மிகவும்...

ஒமிக்ரோன் கொரோனா மாறுபாடு, சுமார் 30 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது என்றும் நிலைமையை தாம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், மேலும் மரபணு வரிசைமுறையை அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

உலகில் கண்டறியப்பட்ட ஐந்தாவது கொரோனா மாறுபாடான ஒமிக்ரோன் அதன் அதிக பரவுதல் காரணமாக கவலைக்குரிய மாறுபாடாக உள்ளது என்றும் அந்த மாறுபாடு இலங்கைக்குள் நுழைவதை தடுக்கவே முடியாது என்றும் அவர் கூறினார்.

# மற்றுமொரு சிறுமி...

இச்சிறுமி, தனது தாயுடன் பாடசாலைக்குச் செல்வதற்காக படகில் பயணித்த நிலையில் ஏற்பட்ட விபத்தில், தாய் கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

எனினும், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, மேற்படி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் பாடசாலை மாணவர்கள் ஐவரும் ஆசிரியை ஒருவரும் வயோதிபர் ஒருவரும் அடங்குகின்றனர்.

சிறுமியின் ஜனாசா, கிண்ணியா - நடுத்தீவு பொது மையவாடியில் நேற்று (28) மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி விபத்து குறித்து கிண்ணியா பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகாவலி கங்கைக்குள்...

இதன்போது சாரதியும் மற்றுமொருவரும் பாய்ந்து உயிர் தப்பியுள்ளதுடன், மற்றுமொருர் நேற்று (28) மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட நபரும் சாரதியும் குருதெனிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், மற்றைய நபர் இரத்தினபுரியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற போதிலும் அதிகாலை வரை எவருக்கும் அறிவிக்காமல் மறைத்த குற்றச்சாட்டில் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விபத்துக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து, மட்டக்களப்பில் நேற்று (28) கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தின.

மட்டக்களப்பு காந்திபூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், ஊடகவியலாளர்கள், பல் சமய ஒன்றியங்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவில் ஊடகவியலாளர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமைக்கு கடுமையான எதிர்ப்புகள் இதன்போது தெரிவிக்கப்பட்டதுடன், ஊடகவியலாளரை தாக்கிய இராணுவத்தினரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

# எல்லைகளை மூடிய...

ஒமிக்ரோன் மாறுபாடு அச்சம் காரணமாக அனைத்து எல்லைகளையும் மூடும் முதல் நாடு இஸ்ரேல் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், வெளிநாட்டவர்கள் தமது நாட்டுக்குள் நுழைவதற்கு நேற்று (28) நள்ளிரவு முதல் அந்நாடு தடைவிதித்துள்ளதுடன் அமைச்சரவையும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்தன.

குறைந்தது 14 நாள்களுக்கு இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் நஃப்டாலி பெனட் அறிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் இருவரும் இத்தாலியின் மிலான் நகரில் ஒருவரும் கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ‘சிலிண்டர்கள் வெடிக்கின்றனவா?’

## கேட்கவும் இல்லை: கேள்வியும் படவில்லை

எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் ஊடகங்கள் நன்கு ஆராய்ந்து செய்திகளை வெளியிட வேண்டுமென நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து, மக்கள் உயிரிழந்ததாக அண்மையில் ஒரு தேசிய நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால், நாம் அப்படியான செய்திகள் எதனையும் காணவில்லை. பொலன்னறுவை பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன. எவ்வாறாயினும், உயிரிழந்தவர் இறப்பதற்கு முன்னர் விபத்து தொடர்பில் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

“தற்போதைய அரசாங்கம் ஊடகங்களுடன் மோதும் அரசாங்கம் அல்ல. ஊடகங்கள் அனைத்தையும் ஆராய்ந்தே செய்தி வெளியிட வேண்டும். என, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்

ஊடகங்கள் இவ்விவகாரத்தை ஆராய்ந்து செய்தியை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகள் சொல்பவையெல்லாம் ஊடகங்களில் வெளிவந்தால் மக்கள் கொந்தளிப்பார்கள். எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என கூறிய விவகாரத்திலும் இதுவே நடந்தது எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஊடகங்களுடன் மோதும் அரசாங்கம் அல்ல. ஊடகங்கள்



அனைத்தையும் ஆராய்ந்தே செய்தி வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.




# ‘சிறந்த சுகாதார ஊடகவியலுக்கான விருது’

இலங்கையில் 1887 முதல் செயற்பட்டு வரும் தொழில் வாண்மை மருத்துவ அமைப்பான இலங்கை மருத்துவ சங்கம், அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக சுகாதாரத் துறை தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பங்களிப்பு நல்கிவரும் ஊடகவியலாளர்களை வருடாவருடம் தெரிவு செய்து, ‘சிறந்த சுகாதார ஊடகவியலுக்கான விருது’ வழங்கி கௌரவித்து வருகின்றது.

அந்த வகையில் 2019/2020 க்குரிய சிறந்த சுகாதார ஊடகவியலுக்கான விருது வழங்கும் வைபவம் இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் தினகரன் - வாரமஞ்சரி தேசியப் பத்திரிகையின் இணையாசிரியர் மர்லின் மரிக்கான மருத்துவ சங்கத்தின் தலைவியும் நரம்பியல் மருத்துவ நிபுணருமான டொக்டர் பத்மா குணரட்னவிடமிருந்து 2019/2020 க்குரிய ‘சிறந்த சுகாதார ஊடகவியலுக்கான விருது’ சான்றிதழைப் பெற்றுக்கொள்வதையும் அருகில் சங்கத்தின் ஊடகக்குழுத் தலைவர் டொக்டர் ருவைஸ் ஹனிபாவையும் காணலாம் .

# இலங்கைக்குள் ‘ஒமிக்ரோன்’ பரவலாம்

## வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை



கொரோனா வைரஸின் புதிய திரிபான ஒமிக்ரோன் வைரஸ் இலங்கைக்குள் பரவும் ஆபத்து காணப்படுவதாகவும் இந்த வைரஸ் தொடர்பில் மக்கள் பீதியடைய தேவையில்லையெனவும் இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் பத்மா குணவரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஒமிக்ரோன் என்கிற கொரோனா வைரஸ் புதிய திரிபொன்று பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். டெல்டா வைரஸைவிட 500 மடங்கு வேகமாக ஒமிக்ரோன் வைரஸ் பரவும் எனவும், இந்த வைரஸ் இலங்கைக்குள் பரவும் ஆபத்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. இந்த வைரஸ் தொடர்பில் மக்கள் அச்சப்பட தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்திகொண்டவர்களுக்கு பெரும்பாலும் இந்த வைரஸ் பிரச்சினை இருக்காது என கூறப்படுகிறது. இது இலங்கைக்கு மாத்திரமல்லாது உலக நாடுகள் அனைத்தும் தற்போது முகங்கொடுக்கிற பாரிய சவால் எனவும் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணவரத்ன கூறினார்.

### ஒமிக்ரோன் வந்தால் வசந்தகாலம் முடிவுக்கு வரும்

தென்னாப்பிரிக்காவில் இனங்காணப்பட்டுள்ள ஆபத்தான கொரோனா வைரஸ் திரிபான ஒமிக்ரோனை, நாட்டுக்குள் நுழையவிடாக கவனமாக செயற்பட வேண்டும் என சுகாதார தொழில் வல்லுநர்கள் கல்வியகத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். ஒமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் நுழைந்தால் நாட்டின் வசந்த காலம் முடிவுக்கு வரும் எனவும் எச்சரித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள தலைவர் ரவி குமுதேஷ், மூன்று மணித்தியாலங்களுக்குள் பரிசோதனை அறிக்கை கிடைக்கக் கூடிய விமான நிலையத்திலுள்ள பிசிஆர் இயந்திரத்தை விரைவாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

நாட்டு மக்களிடையே இயற்கையாகக் காணப்படும் நோய் எதிர்ப்பு சக்தி, தடுப்பூசியால் பெற்றுகொள்ளப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றாலேயே நாட்டில் ஓரளவேனும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதெனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களும் இந்த வைரஸால் பாதிக்கப்படலாம். மேலும், அனைத்துத் தடுப்பூசிகளையும் எதிர்க்கும் திறன் கொண்ட இந்த வைரஸானது, இலங்கைக்குள் பரவுமாக இருந்தால், நாட்டிலுள்ள வசந்த காலம் முடிவுக்கு வரும் என்பது உண்மை எனவும் தெரிவித்தார்.

நாட்டுக்குள் வருபவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. நாட்டுக்கு வருபவர்களுக்கு விரைவாகப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஹோட்டல், பிசிஆர் மாபியாக்களுக்கு அரசாங்கம் அடிபணிந்து செயற்பட கூடாது என்பதை நாம் அரசாங்கத்துக்குக் கூற விரும்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

# இசைப் பிரியாவுக்காக குரல் கொடுத்துள்ளேன்



தனிப்பட்ட வகையில் தன்னை இலக்கு வைத்து சமூக வலைத்தளங்கள் ஊடாக தான் தாக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர், பொதுவாக, நடைமுறை நுண்ணறிவு உள்ளவர்கள் பெண்களை திட்டுவதோ அல்லது துஷ்பிரயோகம் செய்வதோ இல்லை. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவமதிக்கப்பட்டபோது, அரசாங்கத்தைக் கைப்பற்றி அந்த அவமானங்களுக்குப் பதிலளித்தார் எனவும் தெரிவித்தார்.

வடக்கிலும், தெற்கிலும் பெண்களுக்கு எதிரான எந்தவொரு வன்முறைகளையும் தான் ஊக்குவிக்கப்போவதில்லை. வடக்கில் இசைப் பிரியா துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் நான் பேசியிருக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா காவிகளால் மாணவர்களின் பொருட்கள் கொள்ளை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொரோனா தனிமைப்படுத்தல் பாதுகாப்பு நிலையமாக கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வந்த காவத்தை கல்வி கல்லூரியில் தனிமைப்படுத்தலுக்காக தங்க வைக்கப்பட்டிருந்தவர் களால் இந்த விடுதிக்குரிய ஆசிரியர் மற்றும் மாணவர்களின் அலுமாரிகள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கல்விக் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 12 ஆம் திகதி இக்கல்விக் கல் லூரியின் தனிமைப்படுத்தல் பணிகள் முடிவடைந்து இக்கட்டிடங்கள் கல்விக் கல்லூரி நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதிகளில் தங்கியிருந்த ஆசிரியர், மாணவர்கள் விடுதிக்கு வருகை தந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினரிடம் தெரிவித்துள்ளனர்.

திருடப்பட்ட பொருட்களின் பட்டியல் ஒன்றை கல்விக் கல்லூரி நிர்வாகம் தயாரித்துள்ளது. தமது காணாமல் போன பொருட்களுக்கு மாணவர்கள் நஷ்டஈடு கேட்பதாகவும் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். இக்கட்டிடங்களில் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட சிறை ச்சாலை உத்தியோகத்தர்களும் யாசகர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக கல்விக் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# புத்தளம் மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

ரஸீன் ரஸ்மின்

புத்தளத்தில் தெதுரு ஓயா உள்ளிட்ட மூன்று நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று (28) திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் குறித்த நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தெதுரு ஓயா நிர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. ஆறு வான் கதவுகள் நான்கு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும், தப்போவ நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் ஐந்து ஐந்து அங்குலம் வரையும் , இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தெதுரு ஓயா, இங்கினிமிட்டிய மற்றும் தப்போவ நீர்த்தேக்கங்களுக்கு அண்டிய தாழ் நில பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கிரம உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கொடுமைகள் வெளிவருவதை தடுக்கவே தாக்குதல் நடத்துகின்றனர்




வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப்பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகள் வெளிவருவதைத் தடுக்கவே, ஊடகவியலாளர்கள் திட்டமிட்டு தாக்கப்படுகின்றார்கள் என வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே, வடக்கு, கிழக்குத் தமிழர்களின் ஒரே நம்பிக்கையான ஊடகத்துறையை பாதுகாக்க நீதித்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

சுயாதீன ஊடகவியலாளரும், முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்டமையைக் கண்டித்து முல்லைத்தீவு நகரில், நேற்று (28) இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழர்தாயகப் பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகளை உடனடியாக வெளிக்கொணர்வது எமது தமிழ் ஊடகவியலாளர்களாவர். தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகள் வெளிக்கொணர்வதைத் தடுக்கவே, இவ்வாறு திட்டமிட்டு ஊடகங்களை அடக்கியொடுக்குகின்ற செயற்பாடுகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன. அந்தவகையிலேயே ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரனும் இராணுவத்தினால் தாக்கப்பட்டார் என்றார். இந்த விடயத்திலே நீதித்துறை முறையாகச் செயற்பட்டு ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தினையும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாத்து, அதன்மூலம் எமது தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## பெருந்தொகையான ஆயுதங்களுடன்

# ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி சிக்கினார்

அளுத்கம துசித குமார டி சில்வா

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியின் வீட்டிலிருந்து பெருந்தொகையான துப்பாக்கிகள் உள்ளிட் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் ஆயுதக் களஞ்சியத்தில் சேவையில் ஈடுபட்டுவந்த நிலையில் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியின் வீட்டிலிருந்து துப்பாக்கியொன்றும், துப்பாக்கி ரவைகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரை மேல்மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதோடு, சந்தேகநபரிடமிருந்த 9 மில்லிமீற்றர் ரிவோல்வர், அதற்குப் பயன்படுத்தப்படும் 4 மெகசீன்கள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கி ரவைகள் 248, ஏனைய ரவைகள் 370 உள்ளிட்ட பெரும்பான ஆயுதத் தொகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸார் கைப்பற்றியுள்ள இந்த துப்பாக்கிகள், பொலிஸ் அதிகாரி ஒருவர் பயன்படுத்திய துப்பாக்கி ஒன்றும் இருப்பதாகவும் இந்த துப்பாக்கியைச் சந்தேகநபர் அவரிடமிருந்து திருடியுள்ளார். சேவையில் இருக்கும்போது துப்பாக்கியை தொலைத்தமைக்காக குறித்த பொலிஸ் அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# தந்தை தாக்கியதில் மகன் மரணம்

மதுபோதையில் இருந்த மகனை, அவரது தந்தைதாக்கியதில், மகன் உயிரிழந்த சம்பவம் குளியாப்பிட்டி -கடவளகெதர பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் இருந்துள்ளது.

வீட்டுக்கு வந்த 26 வயதான மகன், தனது 46 வயதான தந்தை முதலில் தாக்கியுள்ளார். கோபடைந்த தந்தை, வீட்டிலிருந்த பொல்லால் மகனை தாக்கியுள்ளார். காயமடைந்த மகன், குள்ளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப்பெற்று வந்தார். இந்நிலையிலேயே மரணமடைந்தார்.

இதனையடுத்து, அவரது தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# 27 மரணங்கள் பதிவு

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 27 பேர் நேற்று முன்தினம் (26) உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவர்களில் 14 ஆண்களும் 13 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14,305 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 22 பேரும் 16 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 05 பேரும் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாற்று வீதியை பயன்படுத்தவும்

நிலவும் கடும் மழையுடனான வானிலை காரணமாக, எல்ல - பசறை வீதியின் 16 ஆம் கட்டைக்கு அருகில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கல் மற்றும் மண்மேடு சரிந்து வீழ்ந்தமையால் குறித்த வீதி மூடப்பட்டுள்ளதாகவும் மாற்று வீதியை பயன்படுத்துமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மறு அறிவித்தல் வரை

# படகுகள் ஓட்டத் தடை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

உடன் அமுலுக்கு வரும் வகையில், பொத்துவில், அறுகம்பே பிரதேசங்களில் கடல் வழி, ஏரி மற்றும் களப்பு என்பவற்றில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் அனைத்து விதமான படகுச் சேவைகளுக்கும் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக, பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், நேற்று (28) அறிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் துறைசார்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை குறித்த சேவையில் ஈடுபடுவோருக்கு வழங்கி, அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் படகுச் சேவையை மேற்கொள்ளவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.




மேலும், இது சம்பந்தமான கலந்துரையாடல், படகு உரிமையாளர்களுடன் நடத்தப்படுமெனவும், அறிவித்தல் வழங்கும் வரை படகுச் சேவையில் ஈடுபடவேண்டாமெனவும் கேட்டுள்ளார்.

இதனை மீறிச் செயற்படுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

உண்மையை மறைத்து

## 'அப்பாவிகளின் கைதை ஏற்க முடியாது'

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உண்மையை மறைத்து அப்பாவிகளைக் கைது செய்வதாக இருக்கக்கூடாது எனத் தெரிவித்த முன்னாள் பிரதியமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப், அனுமதி கொடுத்ததற்காக நகர பிதாநளீமையையோபடகு ஓட்டுநரையோ கைது செய்ய முடியாது என்றார்.

கிண்ணியாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்கள் 100 வருடங்களுக்கு மேலாக அங்கிகரிக்கப்படாத பாதையில் பயணித்திருக்கிறார்கள். இதற்காக அனுமதியளித்தவர்களையும் படகு ஓட்டிகளையும் சிறையில் அடைக்க முடியாது.


"இந்தப் பால புனரமைப்புக்கான கால தாமதம் ஏன்? இதன் பிண்ணனி என்ன என்பதை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். இந்தப் புனரமைப்புக்கான கொந்தராத்து வேலைகள் இரு கம்பனிகளிடம் கைமாற்றப்பட்ட நிலையில், மூன்று கோடி ரூபாய் பணமும் கைமாற்றப்பட்டுள்ளது.

"இந்த விடயத்தில் அரசியல் குளிர்காய்வதற்கு எனக்கு விருப்பமில்லை. 6 மாதங்களாக புனரமைப்புப் பணிகள் கொமிசன் என்ற பேரில் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலமாக, அப்பாவிகளை சிறைக்குத் தள்ளி, தங்களை நியாயப்படுத்துவதில் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர்" என்றார்.

இராணுவத்தால்

## சேதனப் பசளை கையளிப்பு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



இலங்கை இராணுவத்தின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புப் பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்ட 91 ஆயிரம் கிலோகிராம் கொண்ட சேதனப் பசளை, லக்பொஹர நிறுவனத்திடம், திருகோணமலையில் வைத்து நேற்று முன்தினம் (27) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

சேதன விவசாயத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக, இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர டி சில்வாவினால் தலைமையில், இவ்வாறு சேதனப் பசளை கையளிக்கப்பட்டது.

இவ்வேலைத் திட்டம், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டதாகவும் முதல் கட்டமாக 93 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு, உரிய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதாகவும் இராணுவ தளபதி இதன்போது தெரிவித்தார். அத்துடன், இலங்கை இராணுவத்தின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரிவினரால் 25,000 மெற்றிக் தொன் சேதன பசளை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

லக்பொஹர நிலையங்கள் ஊடாக இச்சேதனப் பசளையை, விவசாயிகள் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக லங்கா லக்பொஹர நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிரதேச முகாமையாளர் தம்மிக ரட்நாயக்க இதன்போது தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் சேதனப் பசளையின் விலை 15 ரூபாய் தொடக்கம் 25 ரூபாய் விலை வீச்சிடையே விற்பனை செய்வதற்கு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அம்பாறையில்

## முப்படை, பொலிஸ் தீவிர ரோந்து

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து தீவிர ரோந்தில் ஈடுபடுவதுடன், சோதனை நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த திங்கட்கிழமை(22) வெளியிட்டிருந்திருந்தார்.

இதற்கமைய, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸ் நிலையங்கள், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை மற்றும் கல்முனை இராணுவ மகாம் உள்ளிட்ட இடங்களில் பணியாற்றும் பாதுகாப்புத் தரப்பினர் இச்செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்..

இத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதி வேகமாக செல்வது, மதுபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்படுகின்றது.

இதன்போது, விதி முறைகளை மீறியவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுவதுடன்,, வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள், அபராதம் மற்றும் எச்சரிக்கை விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா நெருக்கடியை

## 'கட்டுப்பாடுகளுடன் வெற்றி கொள்வோம்'

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

உலகளாவிய கொரோனா நெருக்கடிகளை கட்டுப்பாடுகளுடன் இருந்துதான் வெற்றி கொள்ள வேண்டுமென ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தெரிவித்தார்.

கொரரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு வாழ்க்கைக்கு மீளமைப்பதற்காக மக்களை மகிழ்வூட்டி விழிப்பூட்டும் கலா ரசனை நிகழ்வுகள், ஏறாவூர் பிரதேச கலாசார மத்திய நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுகள், பிரதேச முன்னணி கலைஞர்களின் பங்குபற்றுதலுடன், ஏறாவூர் வாவிக்கரையோர பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் (27) இரவு நடைபெற்றன.

நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச கலைஞர்கள் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கமும் அந்நோய்பற்றி மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டியதன் அவசியம் குறித்து தமது கலை நிகழ்வுகளினூடாக வெளிப்படுத்தினர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலாளர் நிஹாறா, "நாம் தற்போது வழமையான எமது அலுவல்களுக்கு முழுக்குப் போட்டு, கட்டுப்பாடுகளுடன் நடக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

"கொரோனாவால் பாதிப்புக்குள்ளாகி ஏற்பட்ட மன அழுத்தம் இன்னமும் நீங்காத நிலையில், மீண்டும் எச்சரிக்கை மணி எழுப்பப்பட்டிருக்கின்றது.

"எனவே, நாம் ஒவ்வொருவரும் விழிப்பாக இருந்து தன்னையும் ஒட்டு மொத்த சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

## கடற்கரையில் துப்புரவுப் பணி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



கம்பஹா, அத்தனக்கல்ல 306 பி 2 லயன்ஸ் கழகத்தின் சூழல் சுற்றாடல் பிரிவினரால் காத்தான்குடி கடற்கரை, நேற்று (28) துப்புரவு செய்யப்பட்டது.

"இலங்கையை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருப்போம்" எனும் லயன்ஸ் கழகத்தின் திட்டத்தின் கீழ், காத்தான்குடி நகர சபையின் அனுசரணையுடன், இந்தத் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காத்தான்குடி கடற்கரையோரம் மரம் நடுகையும் நடைபெற்றதுடன், காத்தான்குடி நகர சபைக்கு குப்பைத் தொட்டிகளும் கையளிக்கப்பட்டன.

அத்தனக்கல்ல 306 பி 2 லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் ஐ.கே.ராஜபக்ஷ, காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச். அஸ்பர், காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள் மற்றும் அத்தனக்கல்ல 306 பி 2 லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறப்பு:

# மக்களுக்கு எச்சரிக்கை

■ மு.தமிழ்ச்செல்வன், நடராசா கிருஸ்ணகுமார்





வடமாகாணத்தில், பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபால் ஆகியோரால் திறக்கப்பட்டன.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக, இரணைமடு குளத்துக்கு அதன் நீரேந்து பகுதிகளில் இருந்து அதிக நீர் வரவு காரணத்தால், நேற்று (28) அதிகாலை 6 மணியளவில், நான்கு வான் கதவுகளும் திறக்கப்பட்டன.

இதற்கமைய, இரண்டு வான் கதவுகள், 6 அங்குலத்துக்கும் இரண்டு வான் கதவுகள் 12 அங்குலத்துக்கும் திறக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபு, குளத்துக்கு அதன் நீரேந்து பகுதிகளிலிருந்து அதிக நீர் வருகின்றமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றார்.

எனவே, தற்போது வெளியேறுகின்ற நீர் காரணமாக, மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும், அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக, முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளின் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு, அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது குளத்தில் இருந்து வெளியேறுகின்ற நீர் கனகராயன் ஆறு வழியாக கடலைச் சென்றடைகின்றது. இதன் காரணமாக, கனகராயன் ஆற்றுப் பக்கமாக தேவையற்ற முறையில் ஒருவரும் செல்ல வேண்டாம் எனவும் குறிப்பாக சிறுவர்கள் புதினம் பார்ப்பதற்கு செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கூடுதலான மழை வீழ்ச்சி பதிவாகி, இரணைமடுக் குளத்தின் ஏனைய வான் கதவுகளும் திறக்கப்படும் சந்தர்ப்பங்களில், தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் ஆண்டு தோறும் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி நகர்வது போன்று, கூடுதலான மழை வெள்ளம் வருகின்ற போது தற்காப்பு நிலையில் இருக்குமாறும், அறிவிக்கப்பட்டுள்ளது.

உடனடி போக்குவரத்து கட்டுப்பாடு:

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவு

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சியில், அடிக்கடி ஏற்பட்டுவரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு, சுற்றுவட்டம் அமைப்பதோ, சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதோ காலதாமதமாகலாம் என்பதால், உடனடியாக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று, அமைச்சர் டக்ளஸ் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (27), மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்ற நிலை தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்றை நடத்திய கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதாவது, டிப்போ சந்தியில் சுற்றுவட்டம் அமைப்பதில் இடச்சிக்கலும், சட்டச் சிக்கல்களும் இருக்கலாம் என்பதால், அதனைச் செய்துமுடிக்க காலதமாதமாகலாம் என்பதைச் சுட்டிக்காட்டி, அதுவரையில் காத்திருக்காமல் பரந்தன் சந்தி முதல், முறிகண்டி வரையில் ஏ9 வீதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருடன், மாவட்டச் செயலாளரை உடனடியாக கலந்துரையாடல் நடத்தி, இதனை எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை (இன்று) முதல் நடைமுறைப்படுத்துமாறும், அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, டிப்போ சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துவதே பொருத்தமான நடவடிக்கையாக இருக்க முடியும் என்றும், இதுதொடர்பில் முன்னரும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருந்தது என்றும், மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அமைச்சரின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஆகியோர் சுட்டிக்காட்டியதை அடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் இளங்கீரன், அது பற்றி விரைவில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில், மாவட்டச் செயலாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி, எதிர்வரும் திங்கட்கிழமை (இன்று) முதல் பரந்தன் சந்தியிலிருந்து முறிகண்டி வரையில் வேகக் கட்டுப்பாட்டை கணிக்கும் கருவிகளுடன் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## நூலகம் அமைக்கும் திட்டம்...

நாவலரின் 200ஆவது நூற்றாண்டை முன்னிட்டு, அறநெறிப் பாடசாலைகளில் நூலகம் அமைக்கும் திட்டம், யாழ்ப்பாணம் – நல்லூர் நாவலர் ஞாபகார்த்த மண்டபத்தில், நேற்று (28) ஆரம்பித்து வைக்கப்பட்டது. ,(படப்பிடிப்பு: என்.ராஜ்)...

## உதவி கோரல்

தனது 32 வயதினிலே இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள தனது கணவரின் உயிரை காப்பதற்கு உதவுமாறு அவரது மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி, புதுமுறிப்பு பாடசாலை முன் வீதியைச் சேர்ந்த செபஸ்தியான்பிள்ளை தேவராசா ( தேசிய அடையாள அட்டை இல- 198912703797 ) மனைவியே, பரோபகாரிகளிடமிருந்து உதவி கோரியுள்ளார்.

ஒன்றரை வயதான குழந்தையை வைத்துக்கொண்டு அக்குடும்பம் பெரும் சிரமப்படுகின்றது. அவரது கணவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சத்திரசிகிச்சை செய்வதற்கு 45 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவருக்கு உதவ விரும்பு வோர், மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 048200390018363 பணத்தை வைப்பிலிடலாம்.

பல்கலைக்கழக மாணவன் கொலை:

## பிரதமருக்கு சகோதரன் மின்னஞ்சல் அனுப்பிவைப்பு

■ எஸ். தில்லைநாதன்

பிரதமரின் உத்தரவுக்கு அமைய, வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்ட, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனின் மரணம் தொடர்பிலான விசாரணைக் குழுவில் குற்றவாளிகளின் உறவினர், நண்பர்கள் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு இருப்பதனால், முக்கியமான தகவல்கள் பல மறைக்கப்பட்டுள்ளதாக, அவரின் சகோதரன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நேற்று (28) அனுப்பியுள்ள அவசர மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சகோதரன், பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசர மின்னஞ்சலிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திலே மூன்றாம் வருட மாணவனாக கல்வி கற்று வந்த மாதாகோவில் வீதி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன், கடந்த 17.11.2020 அன்று, வாடகைக்கு தங்கி இருந்து கல்வி கற்று வந்த வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில், கொலை செய்யப்பட்டு, தூக்கிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த சம்பவத்தை, அப்போது கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த வீரசிங்க என்பவர், தற்கொலை என கூறி எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை.

இது தற்கொலை அல்ல கொலை என அவரின் சகோதரனால் ஜனாதிபதி,பிரதமர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர், இராணுவத்தளபதி ஆகியோருக்கு அறிவித்ததன் விளைவாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணித்திருந்தார்.

இதையடுத்து, பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கு அமைய, வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் நாம் தெரிவித்த பல விடயங்கள் மறைக்கப்பட்டமை தற்போது தெரியவந்துள்ளது. இதற்கு காரணம் அவ் விசாரணை குழுவில் கொலையாளிகளின் உறவினர், நண்பர்கள் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு உள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

எனவே, அவர்களை நீக்கி விசாரணைகளை முன் கொண்டு செல்ல உதவுமாறு, உயிரிழந்தவரின் சகோதரன், பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசர மின்னஞ்சலில் தெரிவித்துள்ளார்.

### மவுண்ட்ஜின் தோட்டத்தில்

# தைல மரங்களை தரிக்க அனுமதி

**தொழிலாளர்கள் திண்டாட்டம்: நிர்வாகத்துக்கு கொண்டாட்டம்**





■ ரஞ்சித் ராஜபக்ஸ

அரச பெருந்தோட்ட சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் வட்டவளை- மவுண்ட்ஜின் தோட்டத்தில் பெறுமதிமிக்க மரங்களான தைல (Eucalyptus- யூகலிப்டஸ்) மரங்களை வெட்டுவதற்கு தோட்ட நிர்வாகம் அனுமதியளித்துள்ளதாக தெரிவித்து, குறித்த தோட்டத் தொழிலாளர்களால் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மரங்களை வெட்டுவதால் தேயிலைச் செடிகள் நாசமாவதாகவும் இதனால் தோட்ட நிர்வாகத்தால் தமது அன்றாட வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தொழிலாளர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இவ்வாறு பெறுமதிமிக்க யூகலிப்டஸ் மரங்களை வெட்ட தோட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளதன் மூலம் பெருந்தொகை பணம் நிர்வாகத்துக்கு கிடைக்கும் நிலையில், இதனால் தொழிலாளர்களுக்கு எவ்வித பலனும் இல்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த தோட்டத்துக்குரிய இடமொன்று, இரத்தினக்கல் அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன்மூலமும் தோட்ட நிர்வாகம் பெறுமளவு வருமானத்தைப் பெற்றாலும் அதிலிருந்தும் தொழிலாளர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மவுண்ட்ஜின் தோட்ட தொழிலாளர்களுக்கு மாதத்தில் குறிப்பிட்ட சில நாள்களே தொழில் வழங்கப்படுவதுடன், மாதச் சம்பளம் கூட உரிய தினத்தில் வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சுமத்துகின்றனர்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்திடம் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் முயற்சி பலனளிக்கவில்லை.



### வலப்பனை பிரதான வீதியில் கற்கள் சரிவு

## .மூன்று மணிநேரம் போக்குவரத்துக்கு தடை

■ ரஞ்சித் ராஜபக்ஸ

நுவரெலியா- வலப்பனை பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக, நில்தண்டாஹேன- வலப்பனை பிரதான வீதியின் புஸ்ஸலபிட்டிய பகுதியில் கற்கள் சில சரிந்து பிரதான வீதியில் விழுந்துள்ளமையால், குறித்த வீதியுடனான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டதாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

நேற்று (28) காலை 11மணியளவில் இவ்வாறு கற்கள் சரிந்து விழுந்ததாகவும் இதனையடுத்து மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரிசபையின் இராகலை அலுவலக அதிகாரிகள் மற்றும் வலப்பனை பொலிஸார் இணைந்து வீதியிலிருந்த கற்களை அகற்றியதுடன், 3 மணிநேரமாக தடைப்பட்டிருந்த போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்டளவில் சீர் செய்யப்பட்டது.







## முகக் கவசங்கள் அன்பளிப்பு

கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலாதேவியால், திம்புள்ள பத்தன –தெவசிரிபுர கொலனி பகுதியில் உள்ள, பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், மற்றும் பொதுமக்களுக்கு முகக் கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதி கொட்டகலை பிரதேச சபை தவிசாளரால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (பா. பாலேந்திரன்)

### மரண வீட்டுக்குச் சென்று திரும்பிய பெண்

## வீதியில் விழுந்து மரணம்

■ ராமு தனராஜா

மடுல்சீமை- மஹாதோவ லோவர் டிவிஷன் பகுதியில் மரண வீட்டுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணொருவர், வீதியில் தடுக்கி விழுந்து சம்பவ இடத்திலேயே உயரிழந்துள்ளார்.

பசறை 13 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த க. லட்சுமி என்ற 76 வயதுடைய பெண்மணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் மடுல்சீமை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 1990 அம்பியுலன்ஸ் மூலம், சடலத்தை பசறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சி

## தந்தை கைது

■ ராமு தனராஜா

பசறை - பொல்காலந்த பகுதியில் 13 வயது சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற, சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் தாயார், வெளிநாட்டில் பணிபுரியும் நிலையில், சிறுமி தகப்பனாருடன் தனிமையில் வாழ்ந்து வரும் வருவதாகவும் இதன்போதே, சந்தேகநபரான தந்தை சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், பாதிக்கப்பட்ட சிறுமி தனது மாமியிடம் கூறியுள்ளார்.

அதனையடுத்து அச்சிறுமி வேறொரு வீடொன்றில் தங்கவைக்கப்பட்டப் பின்னர், பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பசறை பொலிஸார், சிறுமியை வெளிமடை சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்துள்ளதுடன், சந்தேகநபரான தந்தையை கைது செய்து, பசறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதையடுத்து, சந்தேகநபரை அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

### நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கண்ட போதிலும்

## அபிவிருத்தித்திட்டங்கள் கைவிடப்படவில்லை

**ராமேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு**



■ கே.சுந்தரலிங்கம்

கொரோனா தொற்று காரணமாக முழு உலகமும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டுள்ளது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டாலும், இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவும் எந்தவோர் அபிவிருத்தி திட்டத்தையும் கைவிடவில்லை என்றார்.

ஹட்டன் -டிக்கோயா நகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று (28) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாட்டினுடைய பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டும் என்பதற்காக இந்த வரவு -செலவு திட்டத்திலும் பாரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக இந்த வருட வரவு- செலவு திட்டத்தில் நிதி அமைச்சர் பல மில்லியன் ரூபாய்களை ஒவ்வோர் அமைச்சுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினை கிராம மட்டத்திலிருந்து கட்டியெழுப்புவதற்காக எதிர்காலத்தில் நாம் வெளிநாட்டினை நம்பியிருக்க கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறான ஒரு திட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

இன்று பலர் விலைவாசிகள் சம்பந்தமாக சொல்கிறார்கள் நம்நாட்டில் மாத்திரம் விலைவாசி உயரவில்லை. மரக்கறி விலைவாசிகள் அதிகம் என்றும் உங்களுக்கு தெரியும். நுவரெலியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சீரற்ற வானிலையால் மரக்கறிகள் பாதிக்கப்பட்டன. இது நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்தில் உரம் இல்லாத பிரச்சினைகள் காணப்பட்டன.

அதனை நாங்கள் ஜனாதிபதியிடம் பேசி இப்போது தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். சிலர் உரம் இல்லை என்பதனை மரக்கறி விலை என்பதனையும் ஊடகங்களுடாக தெரிவித்தார்களே தவிர, அவர்கள் அதற்காக எதுவும் செய்யவில்லை என்றார்.

### இந்து, கிறிஸ்தவர்களினது ஒற்றுமையை சீர்குலைக்கவே

## திருவுருவச் சிலைகள் உடைக்கப்படுகின்றன

**மலையக இந்துகுருமார் ஒன்றியம் குற்றச்சாட்டு**

■ கே.சுந்தரலிங்கம்



கடந்த சில தினங்களுக்கு முன் லிந்துலை- நாகசேனை பகுதியிலும் எல்ஜின் தோட்ட பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள மாதாவின் திருச்சொரூப சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளமையானது, இந்து மக்களுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் இடையே இருக்கின்ற நல்லுறவினை சீர்குலைப்பதற்காகவே என அகில இலங்கை இந்து மகா சபாவின் தலைவரும் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச்செயலாளருமான சிவஸ்ரீ வேலு சுரேஸ்வர சர்மா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கொட்டகலையில் நேற்று (28) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மலையகத்தில் நீண்டகாலமாக கிறிஸ்தவ மக்களும் இந்து மக்களும் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இடையில் எப்போதும் சமய ரீதியான பேதங்கள் இருக்கவில்லை. அவர்கள் இவ்வாறான நிலையிலேயே சிலை உடைப்பு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இதனை எவர் செய்தாலும் தராதரமின்றி அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அத்தோடு இந்த சிலை உடைப்பு தொடர்பாக எவருக்காவது தகவல் தெரிந்திருந்தால், அது தொடர்பாக பொலிஸாருக்கு அல்லது மலையக இந்து குருமார் ஒன்றியத்துக்கோ அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். இந்த சிலை உடைப்பு காரணமாக கிறிஸ்தவ மக்களுக்கு ஏற்பட்ட துயரத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

### மலையக அரசியல் அரங்கம்

## அரசியல் தளத்தில் இருந்து உருவாக்கும்

**முன்னாள் எம்.பி திலகராஜ் தெரிவிப்பு**

■ எஸ்.கணேசன்



அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்கும் நோக்கில் 'மலையக அரசியல் அரங்கம்' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று அவ்வமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் எம்.பியுமான உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்

குறித்த அமைப்பு கடந்த 30 ஆம் திகதி உதயமானாலும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் தலவாக்கலையில் நேற்று (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெளிவுப்படுத்தப்பட்டது.

" அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்குதல், அதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல், மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியலை முன்னெடுத்தல் ஆகியன அமைப்பின் பிரதான நோக்கமாகும்." - என்று திலகராஜ் தெரிவித்தார். புதிய அரசியலமைப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு என்பன தயாரிக்கப்பட்டுவருகின்றன. பாராளுமன்றத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, சமூகத்தில் அறிவார்ந்த கருத்தாடல்களை உருவாக்கி, சமூகத்தின் தேவை அறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப தேவையான யோசனைகளை இனிவரும் தேசிய மட்ட விடயங்களின்போது முன்வைப்போம். ஏனெனில் மக்களின் நிலைப்பாடுதான் பிரதிபலிக்க வேண்டும். மலையகம் சமூகம் நூற்றாண்டுகால அரசியல் சமூகம், அதற்கு அரசியல் அடையாளம் இருக்கின்றது. கூலி சமூகம் மட்டும் அல்ல. செனட் சபையில்கூட பிரதிநிதித்துவம் இருந்திருக்கின்றது.

அமைப்பு என்பதால் அதில் எவரும் இணையலாம். " - என்றார்

# நல்லகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கையை அழித்துவிடும் துப்பாக்கி முனைகள்

மாவீரர் நினைவுகூரல், வடக்கு, கிழக்கில் பொலிஸார், இராணுவத்தினரின் உக்கிரமான கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், உணர்வுபூர்வமாக துணிச்சலுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

பொலிஸாரும் இராணுவத்தினரும், தீபமேற்றி நினைவுகூரும் இடங்களில் குவிந்துநின்று, நினைவுகூருவதைத் துப்பாக்கிமுனையில் தடுக்க முயன்றார்கள்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக, இறந்தவர்களை நினைவுகூருவதைத் தடுத்ததாக, அரசாங்கம் கூறியது. ஓரினத்தின் அடிப்படை உரிமைகளை மறுப்பதன் மூலலும் அடக்குமுறைக்குள் வைத்திருப்பதன் மூலமும் அந்த நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக, உலகில் எந்தவொரு சரித்திரமும் கிடையாது. அவ்வாறு அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள், கிளர்ந்தெழுந்து போராடியதாகவே உலக சரித்திரங்கள் பறைசாற்றுகின்றன.

கடந்தகால படிப்பினைகளும் இதைத்தான் பறைசாற்றுகின்றன. இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றதன் பின்னரான காலப்பகுதியில், தமிழர்களின் மொழி உரிமைகள், கல்வி உரிமைகள், காணி உரிமைகள் என்பன சிங்கள அரசுகளால் மறுக்கப்பட்டதன் காரணத்தால், தமிழர்கள் அஹிம்சை வழியில் போராடி, தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயன்றார்கள். அதற்கு அரசாங்கம் மதிப்பளிக்காமல், ஆயுத முனையில் அடக்க முற்பட்டதன் விளைவாகவே, தமிழர்களும் ஆயுதமுனையில் தமது போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

இந்த வரலாற்றையும் படிப்பினைகளையும் தூக்கிக் குப்பையில் எறிந்த வகையிலான போக்கையே, கடந்த வார நிகழ்வுகள் எடுத்துக்காட்டின.

'தமிழர்களுக்கு இந்த நாட்டில், என்ன பிரச்சினை இருக்கிறது? அவர்கள் விதண்டாவாதத்துடனேயே தனிநாடு கேட்டுப் போராடினார்கள். சிங்கள மக்களுடன் இணைந்து வாழ ஏன் முடியாது'? என்று சிந்தித்தவர்கள், இப்போது தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், தமிழர் என்ற காரணத்துக்காக வாய்ப்புகள் புறக்கணிக்கப்படுவதைப் பார்த்து, குழம்பிப்போய் இருக்கிறார்கள்.

அடக்குமுறைகளுக்குள் வைத்துக்கொண்டு, தமிழர்களின் மொழி, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகள் என்பன அழிக்கப்படுவதையும் நிலம் பறிக்கப்படுவதையும் உணர்ந்து, புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழர்களின் அரசியல் நிலைமைதான், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் வாழும் தமிழர்களுக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அரச படைகளின் தமக்கு எதிரான துப்பாக்கி முனைகளுக்கும் அஞ்சாமல், துணிச்சலுடன் அஹிம்சை வழியில் போராடி வருகின்றனர்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அரசாங்கத்தின் மீதான வெறுப்புக்குக் காரணம், பொருட்களின் தட்டுப்பாடும் விலை உயர்வுமே ஆகும். அவர்களின் வாழ்வியல், அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவது இல்லை. ஆனால், தமிழ் மக்ளுக்கு அப்படியில்லை. அவர்கள் சிங்கள மக்களின் அதே பிரச்சினைகளுடன் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் போராட வேண்டியிருக்கின்றது.

சிங்கள இனத்தால், தாம் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவமானப்படுத்தப்படுகின்றோம், உரிமைகளை வேண்டி போராடத் தூண்டப்படுகின்றோம் என்ற உணர்வை இன்றைய இளம்சமுதாயத்தினர் மத்தியில் உருவாக்குவது, நாட்டுக்கு நல்லகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கையை அறவே அழித்துவிடும் என்ற உண்மையை உணர வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியயே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி, தங்களின் கருத்துகளைக் கூறவேண்டும். பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள், இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவெனப் புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல; சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளைக் கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள். நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய், துன்பங்களைப் பிரசவிக்கிறது.

பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகாபாவம். நல்ல நெஞ்சில் இருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# பாராளுமன்றமும் மாண்பும்



என்.கே. அஷோக்பரன்
twitter: @nkashokbharan

பிரித்தானியர் இலங்கையிலிருந்து சுரண்டிச் சென்ற வளங்கள் ஏராளம். கொலனித்துவ கால வளச் சுரண்டலை, எவரும் மறுக்க முடியாது.

அதுபோலவே, பிரித்தானியரிடமிருந்து எமக்கு வழங்கப்பட்ட, சிலவேளைகளில் திணிக்கப்பட்ட விடயங்களும் உள்ளன. ரயில் சேவை, தபால் உள்ளிட்ட பெருந்தோட்டங்கள், பிரித்தானிய மாதிரியிலான பாடசாலை, பல்கலைக்கழக கல்வி முறை, வணிக முறைமைகள் என இந்தப் பட்டியலும் நீண்டது. இதில் மேவி நிற்கும் ஒரு விடயம், பிரித்தானிய பாராளுமன்ற முறையிலான, சட்டவாக்க சபையும் அமைச்சரவை முறையும் ஆகும்.

பிரித்தானியர் சுதேசிகளுக்கு, ஆட்சியில் நியமனம் மூலம் இடம்தரத்தொடங்கிய 1833 முதல், இலங்கை ஆட்சியில் பிரித்தானியா, ஏதோவொரு வகையில் பிரித்தானிய அரச, அரசியல் முறைமைகளின் தாக்கம் இருந்துகொண்டேதான் இருக்கிறது.

சட்டவாக்க அதிகாரங்கள் கொஞ்சம், கொஞ்சமாக சுதேசிகளிடம் கையளிக்கப்பட்டபோது, சட்டவாக்க முறைக்குள் பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்ற முறைமையின் செல்வாக்கும் முக்கியத்துவம் பெற்றது. 1947இல் 'சுதந்திர அரசியலமைப்பு' என்று விளிக்கப்படும் 'சோல்பரி அரசியலமைப்பு' இலங்கைக்கு பிரித்தானியாவால் வழங்கப்பட்டபோது, சோல்பரி அரசியலமைப்பின் கீழான சட்டவாக்க சபையாக இலங்கைக்கான பாராளுமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

இது, வெஸ்மின்ஸ்டர் பாராளுமன்றத்தை ஒத்ததாக, இரண்டு அவைகளைக் கொண்டதாக அமைந்தது. பிரித்தானியாவை ஒத்த அமைச்சரவை (கபினட்) நிர்வாகத்துறை, பிரித்தானியாவை ஒத்த நீதித்துறை; அதிலும், பிரித்தானியாவின் 'ப்ரிவி கவுன்சில்' கடைசி மேன்முறையீட்டு அதிகாரம் கொண்ட நீதிமன்றாக அமைந்தமை எல்லாம்.

இவை, இலங்கை அரசியலமைப்பு, ஆட்சி முறையில் பிரித்தானியாவின் செல்வாக்கை வெளிப்படுத்தி நிற்கின்றன. வெறுமனே கட்டமைப்பு ரீதியான செல்வாக்கு மட்டுமல்ல, இயங்கு முறையிலான செல்வாக்கும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1970களின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள், குறிப்பாக, 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பு, 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பு என்பன சட்டவாக்க, சட்டநிர்வாக முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியருந்தாலும், பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் முறையின் செல்வாக்கு தொடர்கிறது.

நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி இருந்தாலும், நிர்வாக முடிவுகள் அவர் தலைமையில் அமைச்சரவையாலேயே எடுக்கப்படுகின்றன, இது, பிரித்தானிய அமைச்சரவை முறையின் செல்வாக்கு இன்னும் தொடர்வதையே கோடிட்டுக் காட்டுகிறது.

நீதித்துறையின் மீயுயர் நீதிமன்றமாக பிரித்தானிய 'ப்ரிவி' கவுன்ஸில் நீக்கப்பட்டு, இலங்கை உயர் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டாலும், பிரித்தானிய நீதித்துறை முறையின் செல்வாக்கு தொடர்கிறது. பிரித்தானிய முறைமையின் செல்வாக்கு, வெறுமனே கட்மைப்பு, சித்தாந்த ரீதியான செல்வாக்கு மட்டுமல்ல; பாராம்பரியம், கலாசார ரீதிலான செல்வாக்காகவும் அது அமைகிறது.

இலங்கை பாராளுமன்றத்தின் செங்கோல் முறை முதல், சபாநாயகர் அணியும் ஆடை முதல், நீதித்துறையில் அணியும் ஆடை என பிரித்தானியாவின் கலாசார ரீதியான செல்வாக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கிறது.

பிரித்தானியாவின் இந்தப் பொருள்முதல்வாத அம்சங்களையெல்லாம் பின்பற்றும் இலங்கை, வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்ற முறைமையின் மரபுகளை, மாண்புகளை மறந்துவிடுகிறதோ என்பதைத்தான் இலங்கை பாராளுமன்றத்தில் மீண்டும் மீண்டும் அரங்கேறும் நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றனவோ என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஐக்கிய இராச்சியம், தொகுக்கப்படாத அரசியலமைப்பைக் கொண்ட அரசாகும். அதாவது, அங்கு அரசியலமைப்பு என்று ஓர் ஆவணம் கிடையாது. பிரித்தானிய அரசியலமைப்பு என்பது, சில ஆவணங்களினதும் பல மரபுகளினதும் தொகுப்பாகும். மரபுகள் என்பது, பிரித்தானிய அரசியலமைப்பின் முக்கிய ஆணிவேர். பிரித்தானியாவில் மரபுகளின் முக்கியத்துவம் தென்படும் முக்கிய இடங்களிலொன்றாகப் பிரித்தானிய பாராளுமன்றத்தைக் குறிப்பிடலாம்.

மரபுகளால் ஆளப்படும் வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தின் சில மரபுகளைக் கோடிட்டுக்காட்டுதல் இங்கு பொருத்தமானதாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரை அல்லது அவைத்தலைவரை நோக்கியே உரையாற்றுவார்கள். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கியோ, அவர்களது பெயரை நேரடியாகக் குறிப்பிட்டோ பேசுவதில்லை என்பதுதான் மரபு.

இதற்குக் காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட நபர்களாக பாராளுமன்றத்தில் அமர்ந்திருக்கவில்லை. அவர்கள் அவர்களைத் தெரிவுசெய்த மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். ஆகவே, பாராளுமன்றம் என்பது தனிப்பட்ட தாக்குதலுக்கான இடமல்ல. சில சந்தர்ப்பத்தில், சிலர் மரபுகளை மீறினாலும், இந்த மரபு பெருமளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலும், வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுன்ற முறையின் அச்சாரம் சபாநாயகர். சபாநாயகர் பதவி என்பது மரபுகளால் ஆளப்பட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், பக்கச்சார்பின்றிச் செயற்படவேண்டும். சபாநாயகர் பக்கச்சார்பின்றிச் செயற்படும்போதுதான், பாராளுமன்றம் சுமுகமாகவும், கட்டுக்கோப்புடனும் இயங்குவதை உறுதிசெய்ய முடியும்.

இதற்காகவே, பிரித்தானியாவின் பிரதான கட்சிகள், பொதுத்தேர்தலின் போது, சபாநாயகராக இருந்தவர் தேர்தலில் போட்டியிடும் தொகுதியில், வேறு போட்டியாளர்களை நிறுத்துவதில்லை என்ற மரபைக் கடைப்பிடித்து வருகின்றன.

பாராளுமன்றம் ஒன்று, கட்டுக்கோப்பான முறையில் இயங்குவதற்குப் பலமான, பக்கச்சார்பற்ற சபாநாயகர் அவசியம் என்பதை எத்தனை முறை எடுத்துரைப்பினும் போதாது. பிரித்தானிய பாராளுமன்றத்தின் சபாநாயகர்கள், பெரும்பாலும் தமது கடமையைச் சிறப்பாகச் செய்வதை, காணக்கூடியதாக இருக்கிறது.

சில தினங்களுக்கு முன்பதாக, பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியின் கேள்வி நேரம் இடம்பெற்ற போது, பிரித்தானிய பிரதமர் பொறிஸ் ஜோன்சன், முறையை மீறி, எதிர்க்கட்சித் தலைவரிடம் கேள்விகள் கேட்டார். இதன் போது குறிக்கிட்ட சபாநாயகர் சேர் லின்ட்சே ஹொய்ல், "பிரதமரே! உங்களுக்குத் தெரியும், நானும் ஞாபகப்படுத்துகிறேன்; இது பிரதமரிடமான கேள்விகள்; எதிர்க்கட்சித் தலைவரிடமான கேள்விகள் அல்ல" என்றார்.

பிரதமர் ஜோன்சன், மீண்டும் எதிர்கட்சித் தலைவரிடம் கேள்வி எழுப்பியபோது, சபாநாயகர் மீண்டும் மரபுகளை ஞாபகப்படுத்தி, குறித்த நடவடிக்கையைத் தவிர்க்கச் சொன்னார். பிரதமர் ஜோன்சன், மீண்டும் மரபுகளை மீறிப் பேச முயன்ற போது, பொறுமையிழந்து குறுக்கிட்ட சபாநாயகர் சேர் லின்ட்சே ஹொய்ல், "பிரதமரே! எனது முடிவுகளைச் சவாலுக்கு உட்படுத்த நான் அனுமதியேன். நீங்கள் இந்த நாட்டின் பிரதமராக இருக்கலாம்; ஆனால், இந்த அவைக்கு நான்தான் பொறுப்பாளர்" என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இதுதான் சபாநாயகரின் பணி.

இன்னுமொன்றை மட்டும் இங்கு பதிகிறேன். ஜோன் பேகோ சபாநாயகராக இருந்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர் டென்னிஸ் ஸ்கின்னர், அன்றைய பிரதமர் டேவிட் கமரனை, "டொஜ்ஜி டேவ்" என்று விளித்தார்.

சபாநாயகர் பேகோ, ஸ்கின்னரிடம் குறித்த வார்த்தைகளை மீளப் பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொண்டார். ஸ்கின்னர் மறுத்ததுடன், மீண்டும் அதே வார்த்தைகளைப் பயன்படுத்தவே, ஸ்கின்னரை அவையை விட்டு வெளியேற்றினார் பேகோ.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தூசன வார்த்தைகள், பெண்களை இழிவுபடுத்தும் வார்த்தைகள், பாலியல் ரீதியில் அசூயையான வார்த்தைகள் எல்லாம் பேசப்படுகின்றன. இதற்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினரேனும் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறாரா? பலமான சபாநாயகர் ஒருவர் இல்லாமையை இது கோடிட்டுக்காட்டி நிற்பதாகவே தோன்றுகிறது. மிக முக்கியமான இன்னொரு மரபு, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு. அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும், அமைச்சரவை முடிவுகளுக்குக் கூட்டாக பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவர்கள். அமைச்சரவையில் இருந்துகொண்டு, அமைச்சரவை முடிவொன்றை எதிர்த்து பாராளுமன்றத்தில் அமைச்சரொருவர் பேசமுடியாது.

அப்படி அமைச்சரவை முடிவொன்றை அவர் விரும்பவில்லையென்றால், அவர் அமைச்சரவையில் இருந்து விலக வேண்டும். இல்லையென்றால், அமைச்சரவை முடிவை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் மிக வெளிப்படையாகக் காணாமல் போயுள்ள மரபாக அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு மாறிக்கொண்டு வருகிறது.

பிரிதானியாவின் பாராளுமன்ற முறையை, உடைகளை எடுத்துக்கொண்டோம்; மரபுகளை மறந்துவிட்டோமா? மரபுகள் என்பது, ஒரு தலைமுறையிடம் இருந்து இன்னொன்றுக்கு சரிவரக் கடத்தப்படாது போனால், மரபே தெரியாத ஒரு தலைமுறை உருவாகும். தூசன வார்த்தைகளும் அசிங்கமான பேச்சுகளும் ஒலிக்கும் இடமாகவே பாராளுமன்றத்தை இன்றைய தலைமுறை, பார்க்கிறது என்றால், அது பொய்யா? அப்படியானால், பாராளுமன்றம் என்பது, முறைப்படி எப்படி இயங்க வேண்டும் என்றே தெரியாத ஒரு தலைமுறை உருவாகிவிடும் அச்சநிலை இருக்கிறது இல்லையா?

மரபுகள் இழந்த பாராளுமன்றம், மாண்பு இழந்த பாராளுமன்றமாகிவிடும். அந்த அவல நிலையைக் காப்பாற்ற வேண்டிய பணி, மக்களிடம்தான் இருக்கிறது. இனியாவது, பாராளுமன்றத்துக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள். கிளுகிளுப்பு கதைகளும் பச்சைத்தூசனமும் பேசுவதற்கு பாராளுமன்றம் இடமல்ல. அத்தகையவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவது என்பது, ஜனநாயகத்துக்குச் செய்யக்கூடிய பெரும் துரோகமொன்றாகவே இருக்க முடியும்.

## கடிதங்கள்

விடத்தல்தீவு, நட்டாம்பிட்டியில்

### கால்நடைகளால் பயிர்ச்செய்கைகள் அழிப்பு

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் அமைந்துள்ள நட்டாம்பிட்டி எனும் விவசாய நிலப்பரப்பில், மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைகளை, மாடுகள் சேதப்படுத்தியுள்ள நிலையில், உரிய அதிகாரிக்கு தகவல் வழங்கிய போதும், தற்போது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நட்டாம்பிட்டி விவசாய நிலப்பரப்பில், விடத்தல்தீவு கிராம விவசாயிகள் காலம் காலமாகப் பெரும் போக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த விவசாயிகளின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பயிர்கள், ஒவ்வொரு வருடமும் மாடுகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றது. சுமார் ஆறு ஏக்கர் வயலில், பயிர்கள் எதையும் விடாது மாடுகள் அழித்து விட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தகவல் வழங்கிய போதும், தற்போது வரை அப்பகுதிக்கு குறித்த அதிகாரி சமூகமளிக்கவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

எனவே, பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகள், தமது வாழ்வாதாரப் பிரச்சினைக்கு உரிய தீர்வை, உடன் பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எஸ். றொசேரியன் லெம்பேட்



# சிலிண்டர் ரெகியுலேற்றர்கள், டியுப்களை அவதானிக்கவும்

அண்மைக்காலமாக தொடர்ந்து இடம்பெறும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்களுக்கு, தரம் குறைந்த ரெகியுலேற்றர்கள், வால்வுகள், டியுப் வகைகள் காரணமாக அமைந்துள்ளதாக லிட்ரோ காஸ் லங்கா சுகாதார பாதுகாப்பு மற்றும் சூழல் பணிப்பாளர் ஜயந்த பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

“சந்தையின் மொத்த திரவ பெற்றோலிய வாயு தேவையின் 80 சதவீதத்தை லிட்ரோ காஸ் விநியோகிக்கின்றது.

எமது சிலிண்டர்களின் பாதுகாப்பை நாம் உறுதி செய்துள்ளோம். வாடிக்கையாளர்கள், தாம் பயன்படுத்தும் சாதனங்களின் தரம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். எமது சுய ஆய்வுகளை நாம் முன்னெடுத்து வருவதுடன், லிட்ரோவுடன் தொடர்புடைய சம்பவங்கள் பற்றிய அறிக்கை ஒன்றை பூர்த்தி செய்துள்ளோம். இதில் தரம் குறைந்த ரெகியுலேற்றர்கள், வால்வுகள், டியுப் வகைகள் போன்றன வெடிப்புச் சம்பவங்களுக்கு காரணமாக அமைந்துள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

வெடிப்புச் சம்பவங்களில் இரண்டு மாத்திரமே லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களுடன் தொடர்புடையதாக அமைந்திருந்தன. தொடர்ச்சியாக இவ்வாறான எரிவாயு சிலிண்டர் வெடிப்புகள் ஏற்படுவது என்பது அசாதாரண நிலையாகும். சாதாரணமாக, வருடமொன்றில் ஐந்து முதல் பத்து வரையான சம்பவங்கள் மனிதர்களின் கவனயீனமான செயற்பாடுகளால் இடம்பெறுவது தொடர்பில் அறியப்பட்டுள்ளது.



கசிவு ஏற்படுவதாக உணர முடிந்தால், குறித்த சிலிண்டர் காணப்படும் பகுதிக்கு போதியளவு காற்றோட்டத்தை ஏற்படுத்துமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்துகின்றோம். அத்துடன் ரெகியுலேற்றரை சிலிண்டரிலிருந்து அகற்றி, பாதுகாப்பு வால்வை அதில் மீளவும் பொருத்த வேண்டும். அதன் பின்னர் சிலிண்டரை வெளியே கொண்டு செல்ல வேண்டும்.

இவ்வாறு கசிவு ஏற்பட்டதாக கருதப்படும் பகுதிகளில் அலைபேசிகளை பயன்படுத்துவது, மின் விளக்கை ஒளிர விடுவதைத் தவிர்க்க வேண்டும்” என்றார்.

உயர் தரம் வாய்ந்த ரெகியுலேற்றர்களை பயன்படுத்துவதனூடாக, இவ்வாறான கசிவுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். துர்மணத்தினூடாவும், எரிவாயு வெளியேறும் சத்தத்தினூடாகவும் கசிவு இருப்பதை அவதானிக்க முடியும்.

ஒவ்வோர் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையும் டியுப்கள் மாற்றப்பட வேண்டும் என்பதுடன், ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை ரெகியுலேற்றர்கள் மாற்றப்பட வேண்டும்.

GPTW விருதுகள் வழங்கும் நிகழ்வில்

# யூனியன் அஷ்யூரன்ஸ் கௌரவிப்பு




பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக, யூனியன் அஷ்யூரன்ஸ் தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் ஆசியாவில் பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடமாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அண்மையில் இடம்பெற்ற GPTW விருதுகள் வழங்கும் நிகழ்வில் பாரிய நிறுவனங்கள் பிரிவில் வெண்கல விருதை வெற்றியீட்டியிருந்தமை புதிய அங்கமாக அமைந்துள்ளது. அதனூடாக இந்தப் பிரிவில் முதல் மூன்று ஸ்தானங்களுக்குள் தெரிவாகிய இலங்கையின் ஒரே காப்புறுதி நிறுவனம் எனும் பெருமையையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தக் கௌரவிப்பு தொடர்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் தெரிவிக்கையில், “தொற்றுப் பரவல் ஆரம்பித்தது முதல் ஊழியர் ஈடுபாடு என்பது சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்திருந்தது. குறிப்பாக, நாம் எமது இருப்பிடங்களிலிருந்து பணியாற்றியிருந்தோம். ஊழியர்கள் பாதுகாப்பாக உணரும் சூழலையும் அவர்களின் தொழில்களில் வளர்ச்சியைப் பதிவு செய்யக்கூடிய வகையிலும், எமது வாடிக்கையாளர்களுக்கு தினசரி மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. நாம் பிரதானமாக முன்னெடுத்திருந்த நடவடிக்கைகளில், ஊழியர்களுக்கு இலவசமாக உளவியல் ஆரோக்கியத்தை பேணும் வகையிலான ஆதரவை இரகசியத்தன்மை வாய்ந்த வகையில் தகைமை வாய்ந்த நிபுணர்களினூடாக பெற்றுக் கொடுத்திருந்தோம். கொவிட்-19 பரிசோதனை, ஆலோசனை மற்றும் வைத்தியசாலை அனுமதி தொடர்பான விசேட சேவைகளைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். எதிர்பாராத சூழ்நிலைகளில், எதிர்பாராத தீர்வுகளைப் பெற வேண்டிய தேவைகள் எழும். இந்த அழுத்தம் நிறைந்த காலப்பகுதியில் எமது அணி அங்கத்தவர்களுக்கு உதவுவதற்கு நாம் அந்த மேலதிக தூரத்தை பயணித்திருந்தோம். பாரிய நிறுவனங்கள் வரிசையில் கௌரவிக்கப்பட்டிருந்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு இந்த கௌரவிப்பு சேரும்” என்றார்.

நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு உறுதியான ஊழியர் பெறுமதி ஒதுக்கீடுகள் மற்றும் எப்போதும் ஈடுபாட்டுடனான புத்தாக்கமான ஊக்குவிப்புடனான பணிச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன. தொழில்நிலை மேம்படுத்தல் என்பது பிரதான பெறுமதி வழிகாட்டியாக அமைந்திருப்பதுடன், STEP (Striving To Excellence Programme) எனும் புத்தாக்கமான திட்டத்தினூடாக, சிறந்த செயற்பாட்டாளர்களுக்கு எதிர்கால தலைமைத்துவ பணிகளில் சிறப்பாக செயலாற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதில் கூட்டாண்மை நிர்வாகத்துடன் தொடர்புகளைப் பேணுவது, நேரடி வியாபாரத் திட்டங்களில் பங்கேற்பது, முன்மாதிரியாகத் திகழும் வாய்ப்புகள் போன்றன அடங்குகின்றன.

ஓரிடத்திலிருந்து பணியாற்றுவதற்கு மேலதிகமாக, அணியினரை ஊக்கத்துடனும், ஈடுபாட்டுடனும் பேணுவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. பணிக்கும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கிடையேயும் சமநிலையை பேணுவதற்கான நடவடிக்கைகள், காலாண்டு தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான டிஜிட்டல் டவுன்ஹோல் சந்திப்புகள், குழுநிலை செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான *happy hour* அமர்வுகள் போன்றனவும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள், புத்தாக்கம் மற்றும் பயிலல் போன்றன நிறுவனத்தின் கலாசாரத்தில் பிரதான அம்சங்களாக அமைந்திருப்பதுடன், யூனியன் அஷ்யூரன்ஸ் தனது நோக்கம், தன்னேற்புத் திட்டம் மற்றும் பெறுமதிகள் போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்தி, அதன் மக்களுக்கு நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தி, பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடமாகத் திகழ்கின்றது.

மேற்கு வங்காளம்

மரணச் சடங்குக்குச் சென்ற

# 18 பேர் விபத்தில் மரணம்

மரணச் சடங்கொன்றுக்கு சென்ற வான் லொறியுடன் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் ஸ்தலத்தில் உயிரிழந்த சம்பவமொன்று நேற்று (28) பர்கானஸ் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: மேற்கு வங்காள மாநிலம் நாடியா மாவட்டத்தில் ஹன்ஷ்காளி பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில், வடக்கு 24 பர்கானஸ் என்ற இடத்திலிருந்து நபதீப் இறுதிச் சடங்கு இடத்துக்கு சடலத்தை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வானில் இருபதுக்கும் மேற்பட்டோர் சென்றுள்ளார்கள். அப்போது கற்கள் ஏற்றிக்கொண்டு வந்த லொறி, வான் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தக் கோர விபத்தில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 5 பேர் காயம் அடைந்தனர்.



இந்த விபத்து குறித்து அறிந்த மேற்கு வங்காள மாநில ஆளுநர் ஜெக்தீப் தன்கர் பொலிஸாருக்கு அறிவித்து உடனடியாக விபத்து சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு பணித்ததுடன், தனது இரங்கலையும் தெரிவித்தார்.



இராமேஸ்வரம்

# இராமேஸ்வரத்தில் சாகச விளையாட்டு மையம்

இராமேஸ்வரம் அருகே பிரப்பன்வலசை கடற்கரை பகுதியில் கடல் நீர் சாகச விளையாட்டு மையம் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 237 கி.மீ நீளத்துக்கு கடற்கரை உள்ளது. இராமேஸ்வரம் கடலோரப் பகுதியில் தெற்கே மன்னார் வளைகுடா கடற்கரையும் வடக்கே பாக்கு நீரிணை கடற்கரையும் நீர் சாகச விளையாட்டுப் போட்டிகள் நடத்த சிறந்த இடங்களாக உள்ளன.

கடந்த 50 ஆண்டுகளில் தனுஷ் கோடியிலிருந்து தலைமன்னார் வரையிலுமான பாக்கு நீரிணை கடல் பகுதியை 14 பேர் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளனர்.

முதல் கட்டமாக பிரப்பன் வலசையில் நீச்சல், துடுப்புப் படகு, பெடல் படகு, அலைச் சறுக்கு உள்ளிட்ட கடல் நீர் சாகச விளையாட்டுகளுக்கான மையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

மதுரை

இஸ்லாமியர்களுக்கு எதிரான சர்ச்சை

# நீக்கப்படும்வரை போராடுவோம்



நடிகர் சிம்பு நடிப்பில் வெளிவந்துள்ள ‘மாநாடு’ திரைப்படத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக இடம் பெற்றுள்ள சர்ச்சைக்குரிய காட்சிகள் நீக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மையினர் அணியின் தேசியச் செயலர் வேலூர் இப்ராஹிம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மதுரையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ‘மாநாடு’ திரைப்படத்தில் சர்ச்சைக்குரிய பல காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

‘மாநாடு’ திரைப்படத்தில் மீண்டும் ஒரு கலவரத்தை பொலிஸ் துறையே உருவாக்குகிறது. இஸ்லாமியர்கள் இதை பகடைக்காயாகப் பயன்படுத்துகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. இது குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்களை ஆதரிக்கக் கூடிய நிலையை உருவாக்குகிறது.

பொலிஸ் துறையை இழிவுபடுத்தும் காட்சிகளும் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக பொலிஸ் துறையை சித்திரிக்கும் காட்சிகளும் இப்படத்தில் இடம்பெற்றுள்ளன. இதை அனுமதித்தால் சிறுபான்மை மக்களை பொலிஸ் துறையினரின் எதிரிகளாக தீவிரவாதிகளால் ஊக்குவிக்கின்ற போக்கு மேலும் பலமாகும். இதைத் தவிர்க்க சர்ச்சைக்குரிய காட்சிகளை நீக்கவோ, படத்தை தடை செய்யவோ வேண்டும்.

மத்திய தணிக்கைக் குழு அனுமதி அளித்திருந்தாலும், சர்ச்சைக்குரிய காட்சிகளை நீக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் படத்தின் இயக்குநர், நடிகர் சிம்பு ஆகியோர் வீடுகளின் முன்பு பா.ஜ.க சிறுபான்மை அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்றார்.


மதுரை

# திரைப்பட விமர்சனங்களை தவிருங்கள்

திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சிகளையும் உன்னிப்பாக கவனித்து, தங்களது கட்சிக்கு, சமூகத்துக்கு எதிரான கருத்துகள் இருந்தால் அதுகுறித்து தலைவர்கள் விமர்சனம் செய்கிறார்கள். தலைவர்கள் விமர்சனம் செய்யும்போது அது மிகப்பெரிய அளவில் சர்ச்சையாக வெடிக்கிறது.

சில தினங்களுக்கு முன் சிம்பு நடித்த ‘மாநாடு’ திரைப்படம் வெளியானது. வன்முறையை தூண்டும் ‘மாநாடு’ படத்தை தடைசெய்ய வேண்டும் என பாரதிய ஜனதா கட்சி நிர்வாகி ஒருவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை கூறுகையில் “திரைப்படத்துறை விமர்சனங்களை கட்சி நிர்வாகிகள் தவிர்க்க வேண்டும். கட்சியில் முக்கிய பதவியில் இருப்பவர்கள் கூறும் கருத்து நம் கட்சியின் கருத்தாக மாறிவிடுகிறது. எதற்காகப் பேச வேண்டுமோ அப்போது பேச வேண்டும். பேசக்கூடாத நேரத்தில் பேசாமல் இருப்பது அதைவிட முக்கியமான அரசியல் நயம்” என்றார்.



புதுச்சேரி

# மர்மப் பொருள் வெடித்ததில் வீடு இடிந்தது


## மூவர் வைத்தியசாலையில்

புதுவையில் மர்மப் பொருள் வெடித்ததால், வீடு இடிந்து விழுந்தது. இதில் தீக்காயத்துடன் தப்பிய 3 பெண்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முத்தியால்பேட்டை அங்காளம்மன் கோவில் தெருவில் ஒரு குடும்பம் வசித்து வந்தது. அவர்களின் வீட்டில் பயங்கர வெடி சத்தத்துடன் திடீரென தீப்பிடித்தது. வீட்டின் பக்கவாட்டு சுவர், மேற்றளம், வீட்டின் முன்புறம் உள்ள அறையின் சுவர்கள் இடிந்தன.

அறையின் ஷட்டர்கள் பறந்து சென்று அருகில் இருந்த சந்து பகுதியில் கிடந்தன. மேலும் வீட்டில் இருந்த பொருட்கள் அந்தத் தெரு முழுக்க சிதறி கிடந்தன. இடிபாடுகள் தூக்கி வீசப்பட்டதால் அக்கம்பக்கத்து வீடுகளும் சேதமடைந்தன.

வெடிச்சத்தம் கேட்டு, அயலவர்கள் வெளியே வந்தனர். தீக்காயமடைந்து இருந்தவர்களை மீட்க முயற்சி எடுத்தனர். ஆனால் வீட்டின் மாடியில் இருந்த அறைகள் இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்ததால் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஒருவாறு, வீட்டுக்குள் இருந்த 3 பேரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக புதுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

### இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# இலங்கையை வீழ்த்துமா மேற்கிந்தியத் தீவுகள்?

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, காலியில் இன்று (29) காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.



முதலாவது போட்டியில் இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள மேற்கிந்தியத் தீவுகள் தடுமாறிய நிலையில், இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரை சமப்படுத்துவதற்காக இப்போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வெல்ல வேண்டுமானால் அவ்வணியின் துடுப்பாட்டவீரர்கள் மேம்பட்ட பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும்.

தவிர, இலங்கை அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா போன்றோரது விக்கெட்டுகளையும் விரைவாக கைப்பற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மாற்ற இருக்காது எனக் கருதப்படுகின்ற நிலையில், ஓய்வு வழங்கப்பட்டுள்ள துஷ்மந்த சமீரவுக்குப் பதிலாக இலங்கை அணியில் விஷ்வ பெர்ணான்டோ விளையாடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.



### திருக்கோவில் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வென்ற

# இளைஞர் கழக வீரர்கள் பாராட்டி கௌரவிப்பு

■ எஸ். கார்த்திகேசு

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் இளைஞர் விவகார விளையாட்டுதுறை அமைச்சால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழக வீர வீராங்கனைகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு, இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே. பிரபாகரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.
இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட குழு மற்றும் சுவட்டு நிகழச்சி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற 15 கழகங்களைச் சேர்ந்த சுமார் 65 வீர, வீராங்கனைகள் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
அத்தோடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் 33ஆவது தேசிய மட்ட கிரிக்கெட் தொடரில் பங்குபற்றவுள்ள திருக்கோவில் பிரதேச பெண்கள் கிரிகெட் கழக வீராங்கனைகளுக்கான சீருடை மற்றும் காலணிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
இந்நிகழ்வில், திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இருந்ததுடன், நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே. சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். அனோஜா, மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ. முபாரக் அலி மற்றும் நன்கொடையாளர், விளையாட்டுதுறை பயிற்றுப்விப்பாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், விளையாட்டு வீர வீராங்கனைகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



2. இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்ட்:

3. நியூசிலாந்தின் வெற்றிக்கு 280 ஓட்டங்கள் தேவை

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு 280 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், கான்பூரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, டிம் சௌதி 5, கைல் ஜேமிஸன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தபோதும் ஷ்ரேயாஸ் ஐயரின் 105, ஷுப்மன் கில்லின் 52, இரவீந்திர ஜடேஜாவின் 50, இரவிச்சந்திரன் அஷ்வினின் 38 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 345 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டொம் லேதமின் 95, வில் யங்கின் 89 ஓட்டங்களுக்கு மத்தியிலும், அக்ஸர் பட்டேல் 5, அஷ்வின் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றது.



### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# அத்லாண்டாவிடம் தோற்றது ஜுவென்டஸ்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா வென்றது.

அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை டுவான் ஸப்பட்டா பெற்றிருந்தார்.

### இலங்கையின் வீராங்கனைகளில்

# அறுவருக்கு கொரோனா

சிம்பாப்வேயில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் பெண்களின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் பங்கேற்ற இலங்கையணியின் ஆறு வீராங்கனைகளுக்கும், அதிகாரியொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.



இந்நிலையில், சிம்பாப்வேயிலிருந்து இலங்கையணியை அழைத்துக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

### பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் சட்டோகிராமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஹஸன் அலியிடம் 5, ஷகீன் ஷா அப்ரியிடம் 2, பாஹீம் அஷ்ரப்பிடம் 2 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும், லிட்டன் தாஸின் 114, முஷ்பிக்கூர் ரஹீமின் 91, மெஹிடி ஹஸன் மிராஸின் ஆட்டமிழக்காத 38 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 330 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், அபிட் அலி 133, அப்துல்லாஹ் ஷஃபிக் 52, பாஹீம் அஷ்ரஃப்பின் 38 ஓட்டங்களைப் பெற்றபோதும், தஜியுல் இஸ்லாம் 7, எபொடொன் ஹொஸைன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 286 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ், ஷகீன் ஷா அஃப்ரிடி 3, ஹஸன் அலி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நிலையில், நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மெக்சிகோ

# பஸ் விபத்தில் 19 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று வேகக் கட்டுப் பாட்டை இழந்து குடியிருப்பொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி சல்மா நகரில் உள்ள தேவாலயத்திற்கு சுற்றுலா பயணிகளுடன் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இவ்விபத்தில் 19 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 32 பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இதனால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா

### 'ஸ்குவிட் கேம்' ஐ பார்த்த மாணவர்களுக்கு

# ஆயுள் தண்டனை

ஸ்குவிட் கேம்' இணையத் தொடரைப் பார்த்த மாணவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் வடகொரியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




கடுமையான தண்டனைகளுக்கு பெயர்போன நாடான வடகொரியாவில் சினிமா, பொழுதுபோக்கு உள்ளிட்ட கேளிக்கைகள் விடயங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக அமெரிக்கா, தென் கொரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து வீடியோக்களையும் இணையத் தொடர்களையும் வட கொரியாவுக்குள் கொண்டுவருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நெட்ஃபிளிக்ஸில் இதுவரை வெளியான தொடர்களிலேயே மிகவும் பிரபலமான தொடராக 'ஸ்குவிட் கேம் தொடரை சட்டவிரோதமாக பென் ட்ரைவில் வட கொரியாவுக்குள் கொண்டுவந்து அதனை பென் ட்ரைவ் மூலம் விற்பனை செய்தவருக்கு தூக்கு தண்டனையும், அத்தொடரைப் பார்த்த பாடசாலை மாணவர்களுக்கு ஆயுள் தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளையும் அந்நாட்டு அரசு விதித்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் குறித்த மாணவர்கள் கல்வி கற்ற பாடசாலையின் தலைமையாசிரியர், வகுப்பாசிரியர் உள்ளிட்டவர்களையும் பணி நீக்கம் செய்யவும் வட கொரிய அரசு உத்தரவிட்டுள்ளது.

வடகொரியாவில் மாணவர்களுக்கு இது போன்ற கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவது இதுவே முதல் முறை எனக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா



# உலகிலேயே முதல் தடவையாக 3D அச்சிடப்பட்ட கண்

உலகிலேயே முதன்முறையாக நபர் ஒருவருக்கு 3D தொழிநுட்பத்தில் அச்சிடப்பட்ட கண் ஒன்று இடது கண்ணாக பொருத்தப்பட்டுள்ள சம்பவம் பிரித்தானியாவில் இடம் பெற்றுள்ளது.
லண்டனின் கிழக்கு பகுதியில் இருக்கும் ஹாக்னியில் வசிக்கும் ஸ்டீவ் வெர்ஸ்( Steve Verze) என்ற 47 வயதான பொறியாளருக்கே கடந்த 25 ஆம் திகதி குறித்த கண்ணை மூர்ஃபீல்ட்ஸ் ஐ (Moorfields Eye )என்ற வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த வைத்தியசாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் "நோயாளி ஒருவருக்கு முழுவதுமாக தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கண் பொருத்தப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இக்கண் சாதாரணமாகவே தோற்றமளிக்கிறது. அத்துடன் இது குறைந்த ஆக்கிரமிப்பு (less invasive) கொண்டது. அது மட்டுமல்லாமல் தெளிவான கருவிழியினுடைய உண்மையான ஆழமும் இருக்கிறது" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கா

# சிக்கித்தவிக்கும் வெளிநாட்டுப் பயணிகள்

தென் ஆபிரிக்காவில் அண்மையில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் (Omicron) என பெயரிடப்பட்டுள்ள உருமாற்றமடைந்த கொரோனா வைரஸ்ஸானது அந்நாட்டிலிருந்து இருந்து ஹாங்காங், இஸ்ரேல், பிரித்தானியா , ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குப் பரவியுள்ளது.



இதுவரை 100க்கும் மேற்பட்டவர்கள் இவ் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரித்தானியா , அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல முக்கிய நாடுகள் தங்கள் நாட்டிற்குள் தென்ஆபிரிக்காவிலிருந்து வரும் விமான சேவையை இரத்து செய்துள்ளன.

இதன் காரணமாக தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்ற வெளிநாட்டு பயணிகள் தங்கள் நாடுகளுக்கு மீண்டும் திரும்ப முடியாமல் அங்கேயே சிக்கித் தவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகக்து.

அமெரிக்கா

# கேக் செய்து அசத்தும் நாய்

சீக்ரெட் என அழைக்கப்படும் நாயொன்று யார் உதவியுமின்றி தனியாக பூசனிக்காய் கேக் ஒன்றைத் தாயாரித்த விநோத சம்பவமொன்று அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

மேலும் இது குறித்த வீடியோவொன்றினையும் அந்நாயின் உரிமையாளரான மேரி என்பவர் தனது இன்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். குறித்த வீடியோவானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரு

### கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில்

# மம்மி கண்டுபிடிப்பு

பெரு நாட்டில் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட மனித உடல், ஒன்றை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



லிமா நகருக்கு அருகே, கஜமர்குயில்லா என்னுமிடத்தில், பூமிக்கடியில் வட்ட வடிவில் காணப்பட்ட அறைக்குள் இருந்தே இம்மம்மியானது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மம்மியானது அதன் கைகள் மற்றும் கால்கள் கயிறுகளால் கட்டப்பட்டு, அமர்ந்த நிலையில் காணப்பட்டதாகவும், அதன் அருகே, உணவுப் பொருட்கள் மற்றும் பானைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சக்லா மலைப் பகுதியில் வாழ்ந்த ஆதிகால மக்களிடைய, இவ்வாறு இறந்தவர்களின் உடல்களை பதப்படுத்தி வைக்கும் வழக்கம், நடைமுறையில் இருந்துள்ளதாக கூறப்படுகிறது. தற்போது கிடைத்துள்ள மம்மியின் , துல்லியமான காலத்தை அறிந்திடும் வகையில், ரேடியோ கார்பன் முறையில் பரிசோதிக்க, தொல்பொருள் ஆய்வாளர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 29 நவம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.